செய்தி வெளியீடு எண். 115 நாள்17.02.2009

மக்கள் நல்வாழ்வுத்துறை

# செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசு, பொது மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் செயல்படுத்தப்படும் பல நல்ல திட்டங்களில் முழுஉடல் பரிசோதனைத் திட்டமும் ஒன்றாகும். சென்னை அரசு பொது மருத்துவமனையில் இந்த திட்டத்தின் கீழ், ரூபாய் 3,000/– (ரூபாய் முன்றாயிரம்) மதிப்புள்ள இரத்தம், சிறுநீர், ஊடுகதிர், இசிஜி, ஸ்கேன் ஆகிய பரிசோதனைகள், ரூபாய் 250/– (ரூபாய் இருநூற்றி ஐம்பது) செலவில் செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் பணியாற்றும் காவலர்கள் அனைவருக்கும் ரூபாய் 150/– (ரூபாய் நூற்றி ஐம்பது மட்டும்) செலவில் முழுஉடல் பரிசோதிக்கும் சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு தற்போது அறிவித்துள்ளது. சென்னை அரசு பொது மருத்துவமனையில் இத்திட்டம் 18.02.2009 அன்று தமிழ்நாடு அரசு நல்வாழ்வுத்துறை முதன்மை செயலாளர் திரு வி.கே. சுப்புராஜ், ஐ.ஏ.எஸ். அவர்களால், சென்னை காவல்துறை ஆணையர் திரு இராதாகிருஷ்ணன், ஐ.பி.எஸ். அவர்கள் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் முதல்கட்டமாக 2000–க்கும் மேற்பட்ட காவலர்கள் பயனடைய உள்ளார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை சென்னை அரசு பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் டி.பி. கலாநிதியும் மருத்துவக் கண்காணிப்பாளர் பேராசிரியர் டாக்டர் கி. நாராயணசாமி அவர்களும் செய்து வருகிறார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.